**அடைக்கல அன்னை சபைத் தலைமையகம்**

**அரண்வாயல் குப்பம், திருவள்ளூர் மாவட்டம் - 602 025.**

**சுற்று மடல் எண்: 013/2022** | **நாள்: 30.12.2022**

**'சலனமில்லா மனதினிடம் இந்தப் பிரபஞ்சம் தன்னைக் கையளிக்கின்றது' – லாவோட்சே**

## என் பாசத்திற்குரிய அருட்சகோதரிகளே!

**நெஞ்சம் நிறைந்து அன்பான புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

எல்லோருக்குமே புத்தாண்டு ஆசீர்வாதமானதாக

இருக்கவேண்டும் என்ற ஆசை இருக்கிறது.

ஆனால் எது ஆசீர்வாதம் என்ற புரிதலில்தான்

நமக்குக் குழப்பம் நிலவுகிறது.

அதிகமான பணமோ, பதவியோ, சுதந்திரமோ, அதிகாரமோ

ஒரு மனிதனுக்கு ஆசீர்வாதமாக ஆகுமா?

இவைகள் பலருக்கு ஆசீர்வாதங்களாய் இருப்பதைவிட

அதற்கு மாறாக அமைந்துவிடுகின்றன.

நிறைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கான

சில மனநிலைகளை வளர்த்துக்கொண்டால்

**2023** -ஆம் ஆண்டு அனைவருக்கும் ஆசீர்வாதமாய் அமையும்.

**2023 ஆம் ஆண்டு ஆசீர்வாதமாய் அமைய 7 அடிப்படை மனநிலைகள்**

### நன்றி நிறைந்த உள்ளம் தான் ஆசீர்வாதங்களை ஈர்க்கும் விசை:

யார் நன்றியோடு இருக்கிறார்களோ,

யார் எல்லாச் சூழலிலும் ஆசீர்வாதங்களைக்

கண்டுகொண்டு கணக்கிடுகிறார்களோ

நிறைந்த மனத்தோடு நன்றி! நன்றி! எனச் சொல்கிறார்களோ

அவர்களைத் தேடியே ஆசீர்வாதங்கள்

புவிஈர்ப்பு விசை போல தவறாமல் வந்து சேரும்.

### மகிழ்ச்சியான உள்ளம் மகிழ்ச்சியை ஈர்க்கிறது:

யார் ஆண்டவரில் ஊன்றிய மகிழ்ச்சி கொள்கிறார்களோ

அவர்களைத் தேடி மகிழ்ச்சி வந்தடையும்.

ஒரே விதமான அலகுகள் கொண்ட பறவைகள்

ஒன்றாகக் கூடிக்கொள்வது போல

மகிழ்ச்சியான உள்ளம் உடையவரை நோக்கி

மகிழ்ச்சியான மனிதர்களும், அனுபவங்களும்

சாரை சாரையாக வந்தடையும்.

**ஆண்டவருக்குள் என்றும் அகமகிழுங்கள்**

**என்ற இறைவாக்கை வாழ்வாக்கலாமே**

**நல்வாக்கு சொல்லும் நல்ல நாவு:**

‘**நல்ல காலம் பொறக்குது**…

**நல்ல காலம் பொறக்குது**’ என்று தெருவழியே

கூவிச் செல்லும் குடுகுடுப்பைக்காரன் கூடவே ஓடிப்போக,

அம்மா இழுத்துக்கொண்டு வீட்டிற்குள் சென்ற

அனுபவம் பலருக்கும் இருக்கும்.

இந்தக் காந்த வரிகளுக்குத்தான் எத்தனை ஆற்றல்!

இன்றும் யாராவது வந்து **நல்ல காலம் பொறக்குது**

என்று சொல்லமாட்டார்களா என ஏங்குகிறோமே.

அதே நாவு நமக்கும் இருக்கிறதே.

எல்லோரையும் ஆசீர்வதிக்கலாமே;

பாராட்டலாமே; நம்பிக்கைக் கொடுக்கலாமே;

கவலைப்படாதே; எல்லாம் சரியாகும் என்று சொல்லலாமே

‘இதெல்லாம் ஒரு விஷயமே இல்ல’ என்று தேற்றலாமே.

இதைச் செய்தால் **2023** -ஆம் ஆண்டு முழுவதும் அசீர்வாதமாகவே இருக்கும்.

**வரும் நிகழ்வுகளை அனுபவங்களை அப்படியே ஏற்றுக்கொள்வதனால்**

**அனைத்து நிகழ்வுகளும ஆசீர்வாதங்களாக மாறும்:**

நாமோ இன்ன இன்ன அனுபவங்கள்

இப்படி நடக்க வேண்டும் என்று ஆண்டவனுக்கும்

பிரபஞ்சத்திற்கும் கட்டளை இடுகிறோம்.

கேட்டால் நான் எங்கே கட்டளையிடுகிறேன்.

அது தானாகவே நடக்கிறது.

என்ன செய்வது? என்று சலித்துக் கொள்கிறோம்.

தானாகவே நடப்பவைகளை மனமுவந்து ஏற்றுக்கொள்கிறோமா?

நடப்பவை அனைத்தும் நல்லதாக நடக்கிறது என்று நம்புகிறோமா?

நம்பினால் இந்த அங்கலாய்ப்பு, பரிதவிப்பு

கவலை, கலக்கம் ஏன் வருகிறது?

அமைதியாக இருக்க மனம் பழகவில்லையே ஏன்?

அமைதியாக வாழவிரும்பினால் அனைத்தையும்

ஆண்டவன் கரங்களிலிருந்து அப்படியே ஏற்றுக்கொள்வோம்.

**திருப்தியும் நிறைவும் மிகப்பெரிய ஆசீர்வாதங்கள்:**

திருப்தி இன்று மிகக் குறைந்து
எதிர்பார்ப்புகள் எல்லை மீறிச் செல்கின்றன.
1 கோடி பணம் லாட்டரியில் கிடைத்தவன் அது போதாது.
10 கோடி கிடைத்திருந்தால் நலமாய் இருக்கும்
என்று எண்ணுகிறான். என்ன கிடைத்தாலும் போதும்
என்ற மனம் இன்று பலருக்கு வருவதில்லை.
மீண்டும் மீண்டும் திருப்தியடையாமல் மேலும் தேடுகிறோம்.
நிறைவின்மை நிறைவின்மையையே தோற்றுவிக்கும்.
மனத்தை நிறைவோடு வைத்திருக்க ஆசைகளைக் குறைப்பதும்
ஆசையை மேன்மையானவற்றில் பதியச் செய்வதும் அவசியமாகும்.
மேன்மையானவற்றைத் தேடிச் செல்லச் செல்ல
சாதாரணமானவற்றின் மீதுள்ள ஆவல் குறைந்து போகும்
நாம் ஆசீர்வாதமானவர்களாவோம்.

**நமது பார்வை அழகானவற்றையும்**
**நல்லவற்றையும் மட்டுமே பார்க்க வேண்டும்:**

அழகானவற்றைக் காணும் கண்கள் பேறுபெற்றவை.
‘‘**உமது மீட்பை என் கண்கள் கண்டு கொண்டன**’’
என்ற சிமியோனைப் போன்று மீட்பையும் பெருமையையும்
ஒளியையும் காணும்படி நம்மை நாம் பயிற்றுவிக்க வேண்டும்.
இந்த சிமியோன் இப்படி மீட்பைக் காணும்
கண்கள் பெற்றிருந்ததற்குக் காரணம்
‘‘அவர் நேர்மையானவர்; இறைப்பற்று கொண்டவர்;
இஸ்ராயேலுக்கு வாக்களிக்கப்பட்ட ஆறுதலை எதிர்பார்த்திருந்தவர்’’
என்று திருவிவிலியம் இவரைப் பற்றிக் கூறுகிறது.
இந்தப் பண்புகள் இல்லை எனில்
அழகானவற்றையும், நல்லவற்றையும், மீட்பையும்
நம்மால் கண்டுகொள்ள இயலாது.
**இப் பண்புகளில் வாழ முயல்வோமா?**

**உழைப்பே அனைத்து ஆசீர்வாதங்களையும் கொண்டு வருவது; பெருக்குவது:**

நம்மில் பலருக்கு அளவிட முடியாத ஆசைகள் உண்டு.
கோடி கனவுகளும் உண்டு. இலட்சியங்கள், இலக்குகள்
இருப்பதாகச் சொல்லுவதும் உண்டு.
ஆனால் இவைகள் நடைமுறையில் சாத்தியமாகாததற்குக் காரணம் என்ன?
அதற்காக உழைப்பதில்லை.

சிலருக்கு எப்படியாவது Principal ஆகிவிட வேண்டும் என்ற தீராத ஆவல்.
ஆனால் 10 Period கூட நன்றாகக் class எடுத்து
மாணவர்களை உருவாக்குவதில்லை.
தலைமைப் பொறுப்புகள் தன்னைத் தேடி வரவேண்டும் என்ற பேராசை.
ஆனால் அடுத்தவரை அரவணைக்க, புரிந்துகொள்ள,
மன்னிக்க, அடுத்தவர் நலனுக்காக உழைக்க,
தன் தேவைகளைக் குறைத்துக் கொண்டு
அடுத்தவர் தேவையை முன்னிருத்த
எந்த முயற்சியும் செய்வதில்லை.
உழைக்காதவர்கள் சுயநலவாதிகள், தன்னைப்பற்றியே சிந்திப்பவர்கள்.
அடுத்தவருக்காக 1/2 நாளி கூட செலவிட முடியாதவர்கள்
எப்படி இலக்கை அடையமுடியும்?
அடுத்தவர் 8 மணி நேரம் உழைத்தால்
16 மணி நேரம் உழைக்க யார் தயாராகிறார்களோ
அவர்களுக்குத்தான் இலக்கு கைகூடும்.
மற்றவர் ‘முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டது போல’
காலமெல்லாம் காத்திருக்க வேண்டியதுதான்
கணக்கு பார்க்காமல் உழைக்க நம்மைப் பழக்குவோம்.
இன்னும் எத்தனையோ அரிய பண்புகள் இருந்தாலும்
அடிப்படையான இந்த மனநிலைகளை வளர்த்துக்கொண்டு
வாழ்ந்தால் **2023** -இல் உங்களுக்கு

*“நல்ல காலம் பொறக்குது நல்ல காலம் பொறக்குது”*

என்று நான் குறிசொல்லி ஆசீர்வதிக்கிறேன்.

## சகோதரிகள் கவனிக்க:

- இன்று நாம் அறிந்துகொள்ள வேண்டிய அவசியமான சில விஷயங்களில் Land பற்றியதும், சங்கம் பற்றியதும் மிக முக்கிய அம்சங்களாகும். நம்மில் பலருக்கு இதில் பல விஷயங்கள் தெரியவில்லை. அதனைத் தெரிந்துகொள்வது காலத்தின் கட்டாயம் என்பதை உணர்ந்து இதற்கான 2 நாட்கள் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பங்குகொள்வோர் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தவறாது கலந்துகொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

| | | |
|---|---|---|
| **கலந்துரையரங்கம்** | : | **சங்கம் மற்றும் நிலம் சார்ந்த விழிப்புணர்வு** |
| **இடம்** | : | **பான் செக்கர்ஸ் கல்லூரி, விளார்.** |
| **நாட்கள்** | : | **2023 ஜனவரி, 14 - 15** |
| **பங்குகொள்வோர்** | : | **பட்டியலில் உள்ளவர்கள்** |

## சகோதரிகளே செவிசாய்த்துக் கேளுங்கள்:

- நம் சகோதரிகள் இறைபதம் அடையும் நேரத்தில் உடனடியாக Whatsapp -இல் Message அனுப்புகிறோம். பல இல்லத் தலைமைச் சகோதரிகள் உடனடியாக அந்த செய்திகளை சகோதரிகளுக்குச் சொல்லாமல் தாமதிப்பது மிகுந்த வருத்தம் தருகிறது. இறந்த நம் சகோதரிகளின் உடன் பயணித்தவர், அன்புக்குரியவர் உங்கள் குழுமங்களில் இருந்தால் அவர்கள் இறுதிப் பயணத்தில் கலந்து கொள்வதற்காகவே உடனடியாக செய்தி அனுப்புகிறோம். அருள் கூர்ந்து காலதாமதம் செய்து சகோதரிகளை மனம்நோகச் செய்ய வேண்டாம்.
- நாம் '**அடைக்கல அன்னை அவை**' என்ற ஒரே சொந்தத்தால் பிணைக்கப்பட்டுள்ளோம். எனவே இறந்த நம் சகோதரிகளின் இறுதியாத்திரையில் அதிகம் சகோதரிகள், குறிப்பாக அருகாமையில் உள்ள அனைவருமே கலந்து கொள்வதுதான் முறையானது. விரல் விட்டு எண்ணும் அளவில் நீங்கள் கலந்து கொள்வது மிகுந்த வருத்தமளிக்கிறது.
- முன்பெல்லாம் சகோதரிகள் பணிசெய்த பள்ளிகளின் ஆசிரியர்கள், பணியாளர்கள், அன்புப் பணி செய்த கிராமங்களின் மக்கள் போன்றவரை சகோதரிகள் ஊக்குவித்து அஞ்சலிக்கு அனுப்புவது வழக்கம். ஆனால் இப்போதெல்லாம் ஏனோ தானோவென்ற பொறுப்பற்ற தன்மை வளர்வது கவலையளிக்கிறது. '**நிறைவாக வாழப்பட்ட துறவு வாழ்வு மரியாதைக்கு உரியது**' என்பதை நினைவூட்டுகிறேன்.

## சபைத் தலைமை அன்னையின் 2023 ஜனவரி மாதப் பணித்திட்டம்:

| | | |
|---|---|---|
| 01 | - | இறை அன்னையின் பராமரிப்பில் ஆண்டைத் தொடங்குவது |
| 02 - 03 | - | சபைத் தலைமையகம் |
| 04 | - | சென்னை மறைமாவட்டத்தில் வீடுகட்டும் திட்டம் திட்டமிடல் - மாநிலத் தலைமைச் சகோதரி மற்றும் மாநில நிதியாளரோடு கலந்துரையாடல். |
| 05 - 06 | - | சபைத் தலைமையகம் |
| 07 | - | Legal Cell Meeting |
| 08 | - | சபைத் தலைமையகம் |
| 09 | - | சென்னை மறைமாவட்ட நிலம் சார்ந்த கலந்துரையாடல் |
| 10 | - | தனிச் செபநாள் |
| 11 | - | சபைத் தலைமையகம் |
| 12 | - | மௌளச்சூர் தாதியர் கல்லூரி பட்டமளிப்பு விழா |
| 13 | - | பொங்கல் விழா - விளார் கல்லூரி,<br>கட்டிடத் திறப்புவிழா - திருத்துறைப்பூண்டி |

| | | |
|---|---|---|
| 14 - 15 | - | சங்கம் மற்றும் நிலம் சார்ந்த விழிப்புணர்வுக் கலந்துரையரங்கம் - விளார் கல்லூரி |
| 16 | - | தலைமையகம் நோக்கிய பயணம் |
| 17 | - | பொங்கல் விழா |
| 18 | - | அலுவலகப் பணிகள், சபைத் தலைமையகம் |
| 19 | - | பணித்தளங்கள் கட்டமைப்பு பற்றிய கலந்துரையாடல் - மொளச்சூர் |
| 20 - 24 | - | வீடுகட்டும் திட்டம் செயலாக்க சந்திப்புக்கள், உரையாடல்கள். |
| 25 - 26 | - | சபைத் தலைமையகம் |
| 27 | - | தஞ்சை பயணம் |
| 28 | - | இந்திய அரசியலமைப்புச் சட்டம் - ஆசிரியர்களுக்கான கருத்தமர்வு |
| 29 | - | தலைமையகம் நோக்கிய பயணம் |
| 30 | - | குழும நாள் கொண்டாட்டம் |
| 31 | - | சபைத் தலைமையகம் |

**நாம் கொடுக்கும் அர்த்தம்தான்**
**ஒன்றை உயர்வாகவோ தாழ்வாகவோ கட்டமைக்கிறது.**
**சிலையைப் பார்த்து இது வெறும் கல்தானே என்றால் அது கல்தான்.**
**இது என் சாமி என்றால் அதுவே ஆதரவு தரும் சாமி.**
**வாழ்வுக்கும் நாம் தரும் அர்த்தமே அதனை அழகாக்கும்**
**2023 –இல் சின்னச் சின்ன விஷயங்களையும்**
**அர்த்தத்தோடு செய்வோம் ஆத்மார்த்தமாய் வாழ்வோம்.**

HAPPY AND PROSPEROUS

2023




பிரபஞ்சப் பேரன்பில்,

Sr. Maria Philomi FBS

சபைத் தலைமை அன்னை